**DP/OL/2020/2**

எனது எண்: 6/4/OL/2020
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை, பத்தரமுல்ல.
2020 ஜூலை மாதம் 20 ஆம் திகதி

சகல பரிவெனாதிபதி , அதிபர்கட்கு

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சா.தர)ப் பரீட்சை - 2020

க.பொ.த.(சாதாரண தர)ப் பரீட்சை – 2020 இற்குத் தோற்றவுள்ள பாடசாலை விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தற் பத்திரம் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2020 ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி ஆகும்.

1. நிகழ்நிலை முறைமையில் (Online) மட்டுமே விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து அதனை அச்சுப்பிரதி (Print out) எடுத்து அதில் பரீட்சார்த்திகளின் கையொப்பங்களைப் பெற்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவும்.

2. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது பாடங்களைத் தெரிவு செய்வது மிகச்சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் மென்பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண் எக்காரணத்தின் பொருட்டும் பின்னர் மாற்றம் செய்யப்படமாட்டாதென்பதால் முதற் சந்தரப்பத்திலேயே சரியாகப் பூர்த்தி செய்வது அதிபர், ஆசிரியர்களினதும் பொறுப்பாகும் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்க. பாடப்பட்டியல் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தினுள் (www.doenets.lk) இலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**எக்காரணத்திற்காகவேனும் பரீட்சை நிலையம், விண்ணப்பித்த பாடங்கள், மொழிமூலம் மாற்றம் செய்யப்படமாட்டாது. எனவே விண்ணப்பப்படிவத்தை சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பி வைக்கவும். பிழையாக பாடங்களைக் குறிப்பிடுவதால் பரீட்சார்த்திகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கான பொறுப்பு அதிபர்களுக்குரியது. விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு மென்பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையாவெனக் என்பதை கவனித்ததன் பின்னர் ஏனைய செயன்முறைகளை மேற்கொள்ளவும்.**

3. கடந்த முறை தங்கள் பாடசாலை மாணவர்கள் தோற்றிய பாடசாலையை விட வசதியான பரீட்சை நிலையமொன்று நகரமொன்றில் இருப்பின் அதனை மாற்றஞ் செய்து தருமாறு உரிய வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்து அதன் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்க.

4. விண்ணப்பதாரிகளின் பெயர் அவர்களது பிறப்புச்சான்றிதழில் உள்ளவாறு முழுப்பெயருடன் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் பெயர்களில் அல்லது எழுத்துக்களில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கில் ஏற்படும் பிழைகள் தொடர்பாக அதிக கவனஞ் செலுத்துக. பின்னர் பெயர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது.

5. இப்பரீட்சைக்கு நிகழ்நிலை முறைமையில் தரவுகள் உள்ளடக்கப்படும் போது தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகளுக்கு தங்களால் அடையாள இலக்கமொன்று (unique code) வழங்கப்பட வேண்டும். அது ஒன்பது இலக்கங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் கீழே காட்டப்பட்டுள்ளவாறு உருவாக்கப்படல் வேண்டும்.

பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள 5 இலக்கங்களைக் கொண்ட பாடசாலை எண்ணை அல்லது விண்ணப்பதாரிகளின் 4 இலக்கங்களைக் கொண்ட தொடர் இலக்கங்களை உள்ளடக்கியவாறு அடையாள இலக்கத்தை தீர்மானித்துக் கொள்க.

உ.தா: 1. பாடசாலை எண் 6259, விண்ணப்பதாரியின் தொடர் எண் 1 எனின்
அடையாள இலக்கம் : **062590001**ஆக இருத்தல் வேண்டும்.

2. பாடசாலை எண் 28500, விண்ணப்பதாரியின் தொடர் எண் 360 எனின்
அடையாள இலக்கம் : **28500360**ஆக இருத்தல் வேண்டும்.

6. கல்வி அமைச்சின் இலக்கம் 2006/09, 2007/06, 2007 மார்ச் மாதம் 07ஆம் திகதி சுற்றறிக்கைக்கமைவாக 06 கட்டாய பாடங்களும், முதலாம், இரண்டாம், மூன்றாம் பாடத்தொகுதிகளிலிருந்து ஒரு பாடம் வீதமுமாக ஆகக்கூடியது 09 பாடங்களுக்குத் தோற்ற முடியும்.

| **பாட எண்** | **பாடம்** |
|---|---|
| (11) முதல் (16) வரை | சமயம் |
| (21) | சிங்கள மொழியும் இலக்கியமும் |
| (22) | தமிழ் மொழியும் இலக்கியமும் |
| (31) | ஆங்கில மொழி |
| (32) | கணிதம் |
| (33) | வரலாறு |
| (34) | விஞ்ஞானம் |
| (60) முதல் (75) வரை | முதலாம் பாடத்தொகுதி |
| (40) முதல் (52) வரை | இரண்டாம் பாடத்தொகுதி |
| (80) முதல் (94) வரை | மூன்றாம் பாடத்தொகுதி |

**ஆங்கில மொழிமூலத்தில் தோற்றுதல்**

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்கு விண்ணப்பதாரிகளின் விருப்பினடிப்படையில் ஆங்கில மொழிமூலமோ தாய் மொழிமூலமோ தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

- 40 - சங்கீதம் (கீழைத்தேய)
- 42 - சங்கீதம் (கர்நாடகம்)
- 44 - நடனம் (சுதேச)
- 45 - நடனம் (பரதம்)

7. **பரீட்சைக் கட்டணம்**

அரச பாடசாலைகளில், கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளில், அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனாக்களில் இப்பரீட்சைக்கு முதலாம், இரண்டாம் தடவை பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் கட்டணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படுவர். அவர்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கும் போது **''Free''** எனக் குறிப்பிடுக. 3ம் தடவை தோற்றும் விண்ணப்பதாரிகள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

| பாடங்களின் எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 - 9 |
|---|---|---|---|---|---|---|
| கட்டணம் | 100/= | 150/= | 200/= | 250/= | 300/= | 350/= |

8. அச்சுப் பிரதியெடுத்த இரண்டு விண்ணப்பப்படிவங்களில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என உறுதிசெய்து கையொப்பம் பெற்று ஒரு பிரதியை பாடசாலையில் வைத்துக் கொண்டு மற்றைய பிரதியை எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அதில் முழுப்பெயர், பாடம், மொழிமூலம் ஆகிய சகல விவரங்களும் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை சரிபார்க்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்துக. **இவ்விவரங்கள் சரியாக உள்ளடக்குவது பரிவெனாதிபதிகளினதும் அதிபர்களினதும் முழுப்பொறுப்பாகும் என்பதுடன் அதனை மாற்றஞ்செய்வதற்கான வேண்டுகோள்கள் பின்னர் விடுக்கப்படுமாயின் அவற்றை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.**

9. பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.(உறுதிப்படுத்துவதற்கு முன்னர் சகல விவரங்களும் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளன என உறுதிப்படுத்த வேண்டும்.)

உங்களுடைய பாடசாலையிலிருந்து பார்வைக் குறைபாடு/ செவிப்புலன் குறைபாடு அல்லது வேறு விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் இருப்பின் அவர்களுக்காக special candidates எனும் இல் உள்ள விவரங்களைப் பூரணப்படுத்துதல் வேண்டும். விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படுமாதலால் அப்பரீட்சை நிலையங்களில் எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தவும்.

- இரத்மலானை கண் பார்வையற்ற மாணவர்களின் பாடசாலை, இரத்மலானை
- கண் பார்வையற்ற / செவிப்புலனற்ற பாடசாலைகள் பொலம்மாறுவ, தங்காலை
- சிவிராஜ் கண் பார்வையற்ற மாணவர்களின் பாடசாலை, மகாவெவ
- ரோகன – பார்வையற்ற செவிப்புலனற்ற பாடசாலை, வல்கம, மாத்தறை ஆகிய பாடசாலைகள்

10. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

இப்பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தத்தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்குத் தோற்றும் போதும் ஆட்பதிவுத்திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டையை பரீட்சை மேற்பாவையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் மாத்திரமே பயன்படுத்த முடியும். வேறு எந்த அடையாள அட்டையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. **ஆகையால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு பரீட்சைக்கு முன்னர் அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.**

11. இப்பரீட்சைக்கு நிகழ்நிலை (Online) முறைமையில் தரவுகளை உள்ளடக்குதல் தொடர்பாக இத்துடனுள்ள அறிவுறுத்தல்களுக்கு கூடுதலாக ஏதேனும் தெளிவுபடுத்த வேண்டியிருப்பின் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி எண்களுக்கோ தொடர்பு கொள்ளவும். முறைமைக்குள் தரவுகளை உள்ளடக்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளது.

கே.எம்.எச். பண்டார
பரீட்சை ஆணையாளர்
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பும் பெறுபேறும்
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
த.பெ.இல 1503, கொழும்பு

தொலைபேசி இலக்கம் - 011-2784208, 011-2784537, 0113084124

தொலைநகல் இலக்கம் - 011-2784422

பி. சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

**இணைப்பு 01**

## விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள்

**1. முறைமைக்குள் (System) நுழைதல்**

1.1 விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் doenets.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினுள் நுழைக.

1.2 Online Application எனும் icon ஐ (Tile) தெரிவு செய்க (Click செய்யவும்).

1.3 "G.C.E.(O/L) Examination – 2020, Application for students Registration (School)" எனும் Tile ஐத் தெரிவு செய்க.

1.4 கிடைக்கப்பெறும் windows இல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள School Code அல்லது Principal Code ஐ உள்ளடக்கி முறைமைக்குள் பிரவேசிக்குக.

**2. பாடசாலையின் ஆரம்ப தகவல்களை உள்ளடக்குதல்**

2.1 பாடசாலையின் ஆரம்ப தகவல்களை பூர்த்தி செய்வதற்காக இடது பக்கத்திலுள்ள "School Profile" ஐ தெரிவு செய்க.

2.2 இங்கு தங்கள் பாடசாலைக்குரிய தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அங்கு தகவல்களை புதிதாக உள்ளடக்கவோ இதுவரை தரப்பட்ட தகவல்களில் திருத்தங்கள் மேற்கொள்ளவோ Edit Profile பொத்தானை பயன்படுத்துக. கிடைக்கப்பெறும் படிவத்தில் சகல தகவல்களையும் சரியாக பூர்த்தி செய்வதற்கு update changes பொத்தானை அழுத்துக.

**3. விண்ணப்பதாரர்களின் விவரங்களை உள்ளடக்குதல்.**

3.1 முதலாவது செயன்முறை - சகல பரீட்சார்த்திகளினதும் தகவல்களை ஒரே தடவையில் உள்ளடக்குதல்

I. வலது பக்கத்திலுள்ள G.C.E(O/L) Examination - 2020 பொத்தானை Click செய்யவும்

II. Candidates bulk upload ஐ Click செய்யவும்.

III. Download Excel Template ஐ Click செய்யவும்.( Excel தளத்திலுள்ள படிவத்தினை (Format) மாற்றஞ் செய்யதை தவிர்க்கவும்.)

IV. தரவிறக்கம் செய்த (Download) Excel பணித்தாளில் விண்ணப்பதாரிகளுக்குரிய தகவல்களை வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பூர்த்திசெய்க. பாடப்பட்டியலை தரவிறக்கம் செய்வதற்கு இடது பக்கத்திலுள்ள "List of subjects" icon ஐ Click செய்க.

V. பூர்த்திசெய்த Excel பணித்தாளில் .csv கோப்பு மாதிரியை (File type) பயன்படுத்தி Save செய்து கொள்க.

VI. upload the .csv file இல் உள்ள Choose file ஐ பயன்படுத்தி Save செய்து .csv ஐ சரியாக தெரிவு செய்து பதிவேற்றம் (Upload) செய்யவும்.

VII. சரியான தகவல்களை பதிவேற்றம் செய்த பின் குறுந்தகவல் கிடைக்கப்பெறும். அவ்வாறு கிடைக்கப்பெறாவிடின் கோப்பு மாதிரியை (File type.csv) அல்லது உள்ளடக்கிய விவரங்களை (File type.csv) மீண்டும் சரி பார்க்கவும்.

3.2 இரண்டாவது செயன்முறை - ஒவ்வொரு பரீட்சார்த்திகளினதும் விவரங்களை தனித்தனியாக உள்ளடக்குதல்

I. வலது பக்கத்திலுள்ள "G.C.E(O/L) Examination – 2020" Icon ஐ Click செய்யவும்.

II. "Add Candidates" Icon ஐ Click செய்யவும்.

III. கிடைக்கப்பெறும் Windows இல் விண்ணப்பதாரிகளின் தகவல்களை உள்ளடக்கவும்.

IV. Date of Birth ஐ பூர்த்தி செய்யும் போது திகதி - மாதம் - வருடம் "-" பயன்படுத்தி உள்ளடக்கவும். (இவற்றைத் தெரிவு செய்யும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன).

V. அடுத்த விண்ணப்பதாரி தொடர்பான தகவல்களை பூரணப்படுத்துவதற்கு Save Icon ஐ Click செய்யவும்.

VI. இதுவரை உள்ளடக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் சகல தகவல்களையும் சரிபார்ப்பதற்கு மேலே நிரையிலுள்ள "Candidates" Icon ஐ Click செய்யவும்.

**4. இதுவரை உள்ளடக்கப்பட்ட விண்ணப்பதாரியின் தகவல்களை மாற்றம் செய்தல்**

உரிய விண்ணப்பதாரியின் பெயருள்ள நிரலில் "Edit" ஐ Click செய்யவும்.

**5. விண்ணப்பதாரியின் தகவல்களை முழுமையாக நீக்குதல்**

விண்ணப்பதாரியின் பெயருள்ள நிரலில் "Delete" ஐ Click செய்யவும்.

**6. விசேட தேவையுள்ள பரீட்சார்த்தியின் விவரங்களை உள்ளடக்குதல்.**

6.1 விசேட தேவையுடைய பிள்ளைகளின் தகவல்களை உள்ளடக்குவதற்காக திரையில் மேற்பக்கத்தில் "special candidate" நிகழ்ச்சியை Click செய்யவும்.

6.2 ஒவ்வொரு விண்ணப்பதாரியின் எதிரேயுள்ள "Edit" ஐ பயன்படுத்தி உரிய விண்ணப்பதாரியின் தனிப்பட்ட முகவரி (Private address), குறைபாட்டின் தன்மை (Disability type), அது தொடர்பான விவரங்கள் (Details of disability), விசேட பரீட்சை நிலையங்களுக்கு விண்ணப்பிப்பதாயின் அவற்றின் பெயர் (If special center required) என்பவற்றை பூர்த்தி செய்க.

**7. விண்ணப்பப்படிவத்தை அச்சுப் பிரதியெடுத்தல்**

- தங்கள் பாடசாலையின் சகல விண்ணப்பதாரர்களின் விவரங்களும் சரியாக உட்புகுத்தப்பட்டுள்ளனவா என சரிபார்த்து உறுதிப்படுத்திய பின்னர் "Print Application" ஐ Click செய்யவும்.
- கிடைக்கப்பெறும் Pdf கோவையை மீண்டும் சரிபார்த்து பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்திக்கொண்டு 2 பிரதிகளை அச்சுப் பிரதியெடுத்துக் கொள்க.

## අ.පො.ස.(සා.පෙළ) විභාගය - විෂය ලේඛනය
## க.பொ.த.(சா.தர)ப் பரீட்சை - பாடப்பட்டியல்
## G.C.E.(O/L) Examinations - List of Subjects

### ➢ ආගම්/சமயம்/ Religion

11 බුද්ධ ධර්මය/பௌத்தம்/ Buddhism
12 ශෛවනෙරි/சைவ நெறி / Saivanery
14 කතෝලික ධර්මය/கத்தோலிக்க திருமறை/ Catholicism
15 ක්‍රිස්තියානි ධර්මය/கிறிஸ்தவம்/ Christianity
16 ඉස්ලාම්/இஸ்லாம் / Islam

### ➢ භාෂාව හා සාහිත්‍යය/மொழியும் இலக்கியமும்/ Language & Literature

21 සිංහල භාෂාව හා සාහිත්‍යය/சிங்கள மொழியும் இலக்கியமும் / Sinhala Language & Literature
22 දෙමළ භාෂාව හා සාහිත්‍යය/தமிழ் மொழியும் இலக்கியமும்/ Tamil Language & Literature

**31 ඉංග්‍රීසි භාෂාව/ஆங்கில மொழி/ English Language**

**32 ගණිතය/கணிதம்/ Mathematics**

**33 ඉතිහාසය/வரலாறு/History**

**34 විද්‍යාව/விஞ்ஞானம்/ Science**

### ➢ පළමු විෂය කාණ්ඩය/முதலாம் பாடத்தொகுதி / Category I

60 ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය/வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் / Business & Accounting Studies
61 භූගෝල විද්‍යාව/புவியியல்/ Geography
62 පුරවැසි අධ්‍යාපනය /குடியியற் கல்வி / Civic Education
63 ව්‍යවසායකත්ව අධ්‍යයනය/முயற்சியாண்மைக் கற்கை/ Entrepreneurship Studies
64 දෙවන භාෂාව (සිංහල)/இரண்டாம் மொழி (சிங்களம்)/ Second Language (Sinhala)
65 දෙවන භාෂාව (දෙමළ)/இரண்டாம் மொழி (தமிழ்)/ Second Language (Tamil)
66 පාලි/பாளி/ Pali
67 සංස්කෘත/சமஸ்கிருதம்/ Sanskrit
68 ප්‍රංශ/பிரெஞ்சு/ French
69 ජර්මන්/ஜேர்மன்/ German
70 හින්දි/ஹிந்தி/ Hindi
71 ජපන්/ஜப்பான்/ Japanese
72 අරාබි/அரபு/ Arabic
73 කොරියන්/கொரியன்/ Korean
74 චීන/சீன மொழி/ Chinese
75 රුසියන්/ரஷியன் / Russian

### ➢ දෙවන විෂය කාණ්ඩය/இரண்டாம் பாடத்தொகுதி / Category II

40 සංගීතය (පෙරදිග)/ சங்கீதம் (கீழைத்தேயம்) / Music (Oriental)
41 සංගීතය (අපරදිග)/சங்கீதம் (மேலைத்தேயம்)/ Music (Western)
42 සංගීතය (කර්ණාටක)/சங்கீதம் (கர்நாடகம்) /Music (Carnatic)
43 චිත්‍ර/சித்திரம் / Art
44 නැටුම් (දේශීය)/நாட்டியம் (தேசிய) / Dancing (Oriental)
45 නැටුම් (භරත)/நாட்டியம் (பரதம்) / Dancing (Bharata)
46 ඉංග්‍රීසි සාහිත්‍ය රසාස්වාදය/இலக்கிய நயம் ஆங்கிலம்/ Appreciation of English Literary Texts
47 සිංහල සාහිත්‍ය රසාස්වාදය/இலக்கிய நயம் சிங்களம்/ Appreciation of Sinhala Literary Texts
48 දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය/இலக்கிய நயம் தமிழ்/ Appreciation of Tamil Literary Texts
49 අරාබි සාහිත්‍ය රසාස්වාදය/இலக்கிய நயம் அரபு/Appreciation of Arabic Literary Texts
50 නාට්‍ය හා රංග කලාව (සිංහල)/நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)/ Drama and Theatre (Sinhala)
51 නාට්‍ය හා රංග කලාව (දෙමළ)/நாடகமும் அரங்கியலும் (தமிழ்)/ Drama and Theatre (Tamil)
52 නාට්‍ය හා රංග කලාව (ඉංග්‍රීසි)/ நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)/ Drama and Theatre (English)

### ➢ තෙවන විෂය කාණ්ඩය/மூன்றாம் பாடத்தொகுதி / Category III

80 තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය/தகவல் தொடர்பாடலும் தொழினுட்பவியலும்/ Information & Communication Technology
81 කෘෂි හා ආහාර තාක්ෂණය/ விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும்/Agriculture & Food Technology
82 ජලජ ජීව සම්පත් තාක්ෂණවේදය/நீருயிரினவளத் தொழினுட்பவியல்/ Aquatic Bioresources Technology
84 ශිල්ප කලා/நுண்கலை/ Art & Crafts
85 ගෘහ ආර්ථික විද්‍යාව/மனைப்பொருளியல்/ Home Economics
86 සෞඛ්‍යය හා ශාරීරික අධ්‍යාපනය/சுகாதாரமும் உடற்கல்வியும் / Health & Physical Education
87 සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය/தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் /Communication & Media Studies
88 නිර්මාණකරණය හා ඉදිකිරීම් තාක්ෂණවේදය/வடிவமைப்பும் நிருமாணத் தொழினுட்பவியலும்/ Design & Construction Technology
89 නිර්මාණකරණය හා යාන්ත්‍රික තාක්ෂණවේදය/வடிவமைப்பும் இயந்திரத் தொழினுட்பவியலும்/ Design & Mechanical Technology
90 නිර්මාණකරණය, විදුලිය හා ඉලෙක්ට්‍රොනික තාක්ෂණවේදය/வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழினுட்பவியலும் / Design, Electrical & Electronic Technology
92 විද්‍යුත් ලේඛනකරණය හා ලඝුලේඛනය (සිංහල)/மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (சிங்களம்)/ Electronic Writing & Shorthand (Sinhala)
93 විද්‍යුත් ලේඛනකරණය හා ලඝුලේඛනය (දෙමළ)/மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்)/ Electronic Writing & Shorthand (Tamil)
94 විද්‍යුත් ලේඛනකරණය හා ලඝුලේඛනය (ඉංග්‍රීසි)/மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (ஆங்கிலம்)/ Electronic Writing & Shorthand (English)

H.6.4.Su list. indd